திரு. லி. அய்யலுசாமி: அன்பார்ந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்குனேரியில் கால்நடைகள் அதிகமாக இருப்பதனால், பரப்பாடி கிராமத்தில் ஒரு கால்நடை மருத்துவமனையை இந்த அரசு கருணை கூர்ந்து அமைத்துக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலையை அனுசரித்து அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினை எண் 220, திரு கே. சுப்பராயன், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

220—

தொழிலாளர்களுக்கு வாடகை வீடுகள் கட்டுதல்

***124—திரு. கே. சுப்பராயன் :**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில், குறைந்த கட்டணத்தில் வாடகை வீடுகளைத் தொழிலாளர்களுக்கு கட்டித்தர அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம் வளர்ந்தும் விரிவடைந்தும் வருகிற ஒரு மிகப் பெரிய தொழில் மையம் ஆகும். அந்நகரத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள்,-நகரத்தில் இன்றைக்கு இருக்கக்கூடிய மிக ஏறிய வீட்டு வாடகையில் குடியிருக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். எனவே வளர்ந்து வருகிற அந்த தொழில் நகரத்தில், தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகம் இருக்கக்கூடிய அந்த நகரத்தில் தொழிலாளர்களுக்கு என்று மலிவான வீட்டுவசதித் திட்டம் அமலாக்கப்படவில்லை என்பதால்,

மறுபரிசீலனை செய்து மீண்டும் அதை அமலாக்குவதற்குரிய நடவடிக்கையை மாநில அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் ஆலோசனையை கவனத்தில் கொண்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. இரா. மணிமாறன்.

திரு. இரா. மணிமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு பொதுவான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பொதுவான கேள்விக்கு அனுமதி இல்லை. இந்தக் கேள்விக்குத் தொடர்புடைய கேள்விதான் கேட்கவேண்டும்.

திரு. இரா. மணிமாறன் : பல்வேறு நகரங்களில் வீடு கட்டுவதற்காக இடம் கேட்கப்படுகிறபோது, சிலர் இடம் கொடுக்கிறேன் என்று சொல்லி முன்வருகிறார்கள். வீடு கட்டும் சங்கம் அல்லது வாரியம் அந்த இடத்தை வாங்குகின்றபோது வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட வருவாய் அதிகாரி ஆகியோர் பரிந்துரை செய்கிறார்கள். அதிலே சிலரிடம் பணம் பெற்றுக்கொண்டு, மிகப் பெரிய மோசடி, அரசாங்கப் பணத்தை கொள்ளையடிக்கிற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக பல்வேறு கூட்டுறவு துறை அதிகாரிகள்கூட கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. வினா எண் 221, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

221—

பாலர் பள்ளிக்கு நிரந்தரக் கட்டிடம்

***1985—திரு. அ.வ. அப்துல் நாசர் :**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—